விலை சதம் 25

# ஈழநாடு

மலர்: 15 | The Eelanadu | இதழ் 360

யாழ்ப்பாணம் | தை 26 | முஹறம் 14 | வெள்ளிக்கிழமை | 8-2-74

**'ஈழநாடு' சந்தா**
(தபால் மூலம் விநியோகம்)

| | தினசரி - வாரமலர் [உட்பட] | வாரமலர் [மட்டும்] |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 34-00 | ரூ. 6-00 |
| 6 மாதம் | ரூ 67-00 | ரூ 12-00 |
| 1 வருடம் | ரூ. 132-00 | ரூ. 23-00 |

[ஆள் மூலம் விநியோகம்]
(யாழ். மாநகரசபை எல்லைக்குள்)

| | தினசரி - வாரமலர் (உட்பட | வாரமலர் [மட்டும்] |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 26-00 | ரூ. 5-00 |
| 6 மாதம் | ரூ. 51-00 | ரூ. 10-00 |
| 1 வருடம் | ரூ. 100-00 | ரூ. 18-00 |

# ஐ. தே. கட்சியின் மொழி மதக் கொள்கை என்ன?

## பகிரங்கப்படுத்துமாறு வவுனியா எம். பி. கேட்கிறார்



கேதீச்சரம், வியாழன்

"ஐக்கியதேசியக்கட்சி அதன் மொழிக் கொள்கையையும், மதக் கொள்கையும் என்ன என்பதைப் பகிரங்கமாகக் கூறவேண்டும்" என்று வவுனியாத் தொகுதித் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். ஜே. செல்லத்தம்பு கூறினார்.

மன்னார் உப-தேர்தலில் தமிழரசுவேட்பாளராகப் போட்டியிடும் திரு. ஜோன் மார்க்கை ஆதரித்து முருங்கன் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. செல்லத்தம்பு இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

"மன்னார்த் தொகுதிக்கான உப-தேர்தலிலே இத்தொகுதி வாக்காளர்கள் தமது கடமையை முறையாகச் செய்ய வேண்டும். கடந்த காலங்களிலெல்லாம் மன்னார் மக்கள் வீரமாகவும், விவேகமாகவும் தமிழ் மொழிக்காகவும் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்காகவும் செயலாற்றிவந்துள்ளார்கள். இப்போது இன்னும் பன்மடங்கு விவேகத்துடன் தங்கள் வாக்குகளைத் தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு. ஜோன் மார்க்கிற்கு அளித்து அவரை மாபெரும் வெற்றியடையச்செய்வார்கள் என்பது சர்வ நிச்சயம். தமிழ் பேசும் [illegible] தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்துவைத்து, தாம் ஏகபோகம் அனுபவிக்கத் திட்டமிட்டு நடைமுறைகளிலும் சில கட்சிகள் நடந்துவருகின்றன என்பது தெட்டத் தெளிவு. அற்ப சலுகைகளுக்காக எங்கள் இனத்தை, எமது பரம்பரையை அடகுவைக்க முடியாது. சகோதரர்களைப் போன்று வாழுகின்ற தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்துவைத்து, அவர்களை நசுக்க ஆளும் கட்சியும் சரி. ஐக்கிய தேசியக் கட்சியும் சரி ஒரேமாதிரியாகத் தான் நடந்துள்ளன; நடக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கூட்டுக் கட்சிகள் புதிய அரசியல் சாஸனத்திலே பௌத்த மதத்திற்கு முதலிடம் என்றன. ஐக்கிய தேசியக் கட்சியோ அது போதாது; பௌத்தத்திற்குத் தனியிடம் வேண்டுமென்றது. நீதிமன்ற மொழி சம்பந்தமாகத் தமிழர்களும், முஸ்லிம்களும் நீதிக்காக நாம் வாதாடியபோது ஐக்கிய தேசியக்

(6-ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இன்று பாடசாலை பகிஷ்கரிப்பு

(வண்ணார்பண்ணை, வெள்ளி)

வடபகுதியிலுள்ள சகலபாடசாலைகளையும் இன்று பகிஷ்கரிக்குமாறு தமிழ் இளைஞர் பேரவையும் தமிழ்மாணவர் விடுதலை அணியும் கோரிக்கை விடுத்துள்ளன. இவர்களால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அனைத்துலகத் தமிழாராய்ச்சிமகாநாட்டு இறுதிநாள் நிகழ்ச்சியின்போது தமிழ்மக்கள் அரசின் காவற்படையினரால் தாக்கப்பட்டதற்கும் உயிர்நீத்ததற்கும் துக்கம் அனுஷ்டிக்கும்வகையில் இந்த பகிஷ்கரிப்பு அமைந்துள்ளதாகவும். இந்த அநியாய நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள்மீது தகுந்த சட்டநடவடிக்கை எடுக்கும்பொருட்டு ஒரு விசாரணையை நடத்த முன்வரவேண்டும் என்றும் கோரி இந்தப் பகிஷ்கரிப்பு நடத்தப்படுவதாக இப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பகிஷ்கரிப்பில் சகலபாடசாலை மாணவர்களும் தமிழ் அன்னையின் பிள்ளைகளென்ற முறையில் பங்குபற்றும்படியும் தமிழ்மாணவ அணி தமது வேண்டுதலில் கேட்டுள்ளது.

"தமிழா நீ தன்மானத்துடன் வாழவேண்டுமானால் உன்னை நீயே ஆளவேண்டும்". தமிழாராய்ச்சி மகாநாட்டு இறுதி நாள் சம்பவம் உனக்கோர் பாடமாக அமையட்டும். தமிழுக்காக இவ்வைபவத்தில் உயிர்நீத்த வீரர்களின் இல்லங்களுக்கு உங்கள் அனுதாபங்களைத் தெரிவிக்கவும். தமிழ் மாணவர் சமுதாயம் இனவிடுதலைக்கு ஒன்று திரண்டுவிட்டது என்பதை உலகுக்கு அறிவிக்கும்வகையில் இந்தப் பகிஷ்கரிப்பு அமைய வேண்டும், என்று தமிழ்மாணவப் பேரவை தமது துண்டுப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளது. (ஈ)

## கூட்டத்துக்கு இன்னும் அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

முற்றவெளி மைதானத்தில் நாளை மாலை தமிழர்கூட்டணி நடத்த ஏற்பாடு செய்துள்ள கூட்டத்திற்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லையெனக் கூட்டணி வட்டாரம் தெரிவித்தது.

தமிழாராய்ச்சி மகாநாட்டுப் பரிசளிப்பு தினத்தன்று மரண மாணவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக இக் கூட்டம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

இக் கூட்டம் நடத்துவதற்கு முற்றவெளி மைதானத்திற்கும், ஒலிபெருக்கி பாவிப்பதற்கும் கூட்டணியினர் விண்ணப்பித்திருந்தனர்.

முற்றவெளி மைதானத்திற்கு அனுமதி கிடைக்காவிட்டாலுங்கூட தனிப்பட்ட ஒன்றில் இந்த அனுதாபக் கூட்டத்தை நாளை நடாத்தக் கூட்டணியினர் ஆலோசித்து வருவதாகக் கூட்டணி வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது. (அ)

## திருமலையில் இன்றும் நாளையும் ஹர்த்தால்

திருமலை, வெள்ளி

திருக்கோணமலைமாவட்டத்தில் இன்றும் நாளையும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதெனத் திருமலை தமிழ் இளைஞர் பேரவை முடிவு செய்துள்ளது.

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்பரிசளிப்புதினத்தன்று நடந்தசாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவும், மரண மானவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காகவும் இந்த ஹர்த்தால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இவ்விருதினங்களும் திருமலை மூதூர்த் தொகுதிகளிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட்டு, எங்கும் கறுப்புக்கொடி பறக்கவிடப்படுமென்றும் மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரிப்பரென்றும் இளைஞர் பேரவை அறிவித்துள்ளது.

இரு தினங்களும் தியேட்டர்களை மூடிவைக்குமாறும் இரவில் வீடுகளில் மின்விளக்கு ஏற்றவேண்டாமெனவும் பேரவை கோரியுள்ளது. (க.அ)

## உண்ணாவிரதம் முனியப்பகோவில் முன்பாக

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். வண்ணை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நாளை தமிழர் கூட்டணிநடத்தவிருந்த உண்ணாவிரதம் அங்கு நடைபெறுதென்றும் கோட்டை முனீஸ்வரன் கோவில் முன்பாக நடைபெறுமென்றும் கூட்டணி அறிவித்துள்ளது.

உண்ணாவிரதம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 வரைநடைபெறும் விரதமுடிவில் தமிழ்த்தலைவர்கள் உரையாற்றுவார்கள்.

நாளை தினத்தைத்துக்கதினமாக அனுஷ்டிப்பதென்றும் கூட்டணிமுடிவுசெய்துள்ளது. (அ)

## வடக்கில் எண்ணெய் மக்கள் ஆர்வம்

மன்னார், வியாழன்

வடக்கில் எண்ணெய்வளம் இருக்கிறதா என்பதுபற்றிய தீர்க்கமான முடிவு இன்னும் 5 6 மாதங்களில்தெரிந்துவிடும் என்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறியிருக்கிறார். நாட்டில் எண்ணெய் வளம் இருப்பது பற்றிய முடிவை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக அவர் சொன்னார்.

பேசாலையில் முதலாவது எண்ணெய்க் கிணறு தோண்டும் ஆரம்பவேலைகளைத் தொடக்கி வைத்து பேசுகையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.

(5-ம்பக்கம் பார்க்க)

## "யாழ். அசம்பாவிதம்:

# சம்பந்தப்பட்ட பொலிசாரை உடன் வேலை நீக்கவும்"

## திருமலை இளைஞர் கோரிக்கை

திருமலை, வியா.

யாழ். அசம்பாவிதத்திற்கு காரணமாயிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரையும் உடனடியாக வேலை நீக்கம் செய்யுமாறு கோரும் தீர்மானமொன்று திருமலை இளைஞர்பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கல்முனையில் நடைபெற்ற பாடசாலை பகிஷ்கரிப்பு இயக்கத்தில் துண்டுப்பிரசுரம் விநியோகித்தபோது கல்முனை தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த இருவரையும் உடனடியாக விடுதலைசெய்யக் கோரும் தீர்மானமொன்றும் இக் கூட்டத்தில் நிறைவேறியது.

இன்று பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறு மாணவர்களையும், மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பவேண்டாமென பெற்றோர்களையும் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (க. அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரம்

### இலவசம்

ஜி.சி.ஈ. (சாதாரண/உயர் தரங்களுக்கு) வர்த்தகம், கணக்கியல் பாடங்களைப் போதிக்கும் "நோர்தேர்ண் வெஸ்ட்" இன்ஸ்டிரியூட்டரின் கைலண்டர் வழங்குகிறார்கள். முதலிரண்டு வருடங்களில் 70, கச்சேரி கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்துக்கு அனுப்பவும். 194

### கல்வி

ஜி. சி. ஈ. உயர்தர (G.C.E. A.L) வகுப்புக்கள் ஆங்கில இலக்கியத்திலும் மற்றும் கலைப் பாடங்களிலும், தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றன. பிராஜ்மன் என்ரப்பிரைசஸ், தையல் முத்து மாளிகை, 213/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 171

### விற்பனைக்கு

E L மொறிஸ் மைனர் ஓவர் கெட் என்ஜின் 153/D பெசன் பீற்றேஸ் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (கன்னகந்தோர் அருகே) ஞாயிற்றுக்கிழமை 10-ந் திகதி பார்வையிடலாம். 946

சொந்தப்பாவிப்பில் உள்ள E. L. 631 ஹில்மன் கார் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு டாக்டர் அ. பொன்னம்பலம், ஆனைக்கோட்டை. 948

### விற்பனைக்கு

வசதியான வீடு, குழிகைகூடம் முதலியவற்றுடன் ஒன்றேகால் பரப்புக் காணி ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் வைரவர் கோவில் ஒழுங்கையில் விற்பனைக்கு உண்டு. மேற்கூறிய விலாசத்தில் நேரில் தொடர்பு கொள்க-செ. தம்பிஐயா. 949

புதுக்குடியிருப்பில் பரந்தன்-முல்லைத்தீவு றோட்டில் நீர்ப்பாசன வசதியுடன் தென்காணி பதினைந்து ஏக்கர். க. லங்காதரன், 200 மெயின்வீதி, கண்டிகுளி, யாழ்ப்பாணம். 944

விஞ்ஞானம் கணிதம் கற்பிப்பதற்காக மாவட்ட சேவைத் திட்டத்தின்கீழ் தராதரமற்ற உதவியாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பப்படிவம் வர்த்தமானி அறிவித்தலின்படி அச்சிடப்பெற்றது விலை ரூபா ஒன்று. ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 952

### தேவை

நல்ல பாவிப்பிலுள்ள 7 1/2 H.P. மோட்டர், நம். I அல்லது நம். 7 ஹல்லர், சோமசிறி ஹல்லர், மில்லோவை அனுபவமுடையவர்கள் உடனடியாகத் தேவை. சாந்தி அரிசி ஆலை, வட்டுக்கோட்டை. 950

தொழில் நுட்பக் கல்லூரியில் மெஷனிங் பயிற்சி பெற்ற ஒருவர் உடனடியாகத் தேவை. அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். சேவி-கண்ணுடி அன்ட் உலோகத் தொழிற்சாலை, நீர்வேலி. 951

### வைத்தியம்

ஹோமியோபதி நான்கு வருட தினசரிவகுப்புகள் நடைபெறுகிறது. விபரங்களுக்கு நேரில் வரவும். அதிபர், வட இலங்கை ஹோமியோபதி கல்லூரி, 74, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 919

## சுங்க விற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் 14-2-1974 காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கேள்வி முடிவில் பணத்தின் 50% உடனே கட்டியாக வேண்டும். மிகுதிப் பணம் ஏழுநாட்களுக்குள் கட்டப்பட வேண்டும். புடவைகளுக்கும் முதலைத்தோல்களுக்கும் முழுப் பணமும் கட்டியாகவேண்டும். விற்பனையின் முழு நிபந்தனைகளும் 28-5-1954 அரசாங்க வர்த்தமானி நம். 10,675 (பாகம் 1 பிரிவு 2-ல்) கொடுக்கப்பட்டுள்ளது. விற்பனைக்குரிய பொருட்களின் விபரங்களை யாழ். மாவட்ட உபகலெக்டர் சேகரிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. மோட்டார் வண்டிகளின் உதிரிப்பாகங்கள்.
2. முதலைத்தோல் (21 துண்டுகள்.)
3. பூட்டுகள்.
4. தண்ணீர் உப்செல்லா கந்தாளி.
5. தேசிய லொத்தர் சபைக்குத் தேவைப்படாத புடவைகள்.

எஸ். எம். ஜே. சேனரத்ன
யாழ். மாவட்ட
சுங்கச்சேகரிப்பாளருக்காக

சுங்க இலாகா,
யாழ்ப்பாணம்.
4-2-74. 183

## கச்சதீவு இந்தியாவுக்கே சொந்தமாம்

(புதுடில்லி, பெப். 7)

இந்திய சுப்ரீம் கோர்ட் அண்மையில் அளித்துள்ள தீர்ப்பொன்றின்படி கச்சதீவு இந்தியாவுக்கே சொந்தமாகும்.

இதுபற்றிய செய்தியொன்று 'மாலை முரசு' பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

திரு. என். வாசுதேவ செட்டியார் என்பவர் ரூ. 20,000 பெறுமதியான ஐவுளியைக் கச்சதீவுக்குக் கடத்திச் செல்ல முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு சுங்க அதிகாரிகளால் அபராதம் விதிக்கப்பட்டிருந்தார். இதனை எதிர்த்து அவர் இந்திய சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருந்தார். இதனை விசாரித்த சுப்ரீம் கோர்ட் தனது தீர்ப்பில் கச்சதீவு இந்தியாவுக்கே சொந்தம் என்றும் ஆதலால் திரு. செட்டியாருக்கு விதிக்கப்பட்ட அபராதம் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

## 25 வருடங்களின் முன் கல்விப் புரட்சி செய்தவர்

இன்று அரசு அமுல் நடத்தும் கல்விப்புரட்சியை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே ஒரு தனி ஆசிரியர் சிந்தித்தார். செயலும் படுத்தினார் என்றால் அவரை நாம் வியக்காமலிருக்க முடியுமா, பாராட்டாமலிருக்க முடியுமா? இன்றையக் கல்விப் புரட்சியைக் கண்டுகளிக்க அவர் கொடுத்து வைக்கவில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அதாவது கடந்த 71ல் இதே மாதம் இதே நாளில் அவர் இவ்வுலகில் பிரிந்தார். ஆனால் அவர் கனவுகள் இன்று அரசு மூலம் செயல்பட்டு வருகின்றன. நாமும் அதற்குப் பூரண ஒத்துழைப்பு அளிப்பதன் மூலம் அன்னார் ஆன்மா சாந்தி பெற உதவுவோம்.

தீர்க்கதரிசியான இச்செயல் வீரர் றிச்சேட் சின்னத்தம்பி செல்லையா என்ற ஆசிரியர் தான்.

ஆசிரியர் செல்லையா உடுப்பிட்டிக் கிராமத்தில் பிறந்து இருபத்தாறு ஆண்டுகள் மானிப்பாயில் சிறப்புடன் ஆசிரியப்பணியாற்றினார்.

ஐம்பது வருடங்களை முன் வைத்து நாட்டின் தேவைகளைச் சிந்திக்கும் வல்லமை படைத்தவர் நாட்டின் முன்னேற்றம், கைத்தொழில், கமத்தொழில், வாணிபம் என்பவற்றுள் தங்கியுள்ளது என்பதை முன்கூட்டியே யோசித்துச் செயல்படுத்தினார். இவரது நினைவுச்சின்னமாக பல இன்று திகழ்கின்றன. அறிவையும் வளர்க்கக்கூடியது தொழில் முன்னிலைப்பாடமே என இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பே நம்பினார்.

பிள்ளைகளின் நாட்டத்தை அறிந்து திசை திருப்பும் தொழில் ஆலோசகராக அவர் காணப்பட்டார். அந்த வழியில் அகப்பட்டவரில் நானும் ஒருவன். கைத்தொழில் வளர்ச்சிக்காக அதிக பணத்தைச் செலவு செய்தார். வருங்காலத்தைப்பற்றிச் சிந்தியாதவர்கள் இத்திட்டத்தை ஏற்கவில்லை. தோல்வி கண்டதில் சலிப்படைபவர் அல்ல அவர். மேலும் மேலும் முயன்று ஒரு மரவேலைத் தொழிற் பாடசாலையை தமது காணியில் கட்டி எழுப்பி கைத்தொழில் இலாகாவுக்கு உறுதுணையாக இருந்தார். அதுவும் அவரது ஞாபகச் சின்னங்களில் ஒன்றாகும். கைத்தொழில் அல்ல கமத்தொழிலிலும் ஆர்வம் கொண்ட அசல் கமக்காரன் அவர் எனலாம். மானிப்பாயின் மேற்கு எல்லையில் 200 பரப்புக் காணியை வாங்கி அதன் ஒரு பகுதியைத் திருத்தி பீற்றூட், முள்ளங்கி, கோவா, மரவள்ளி, வாழை போன்ற பயிர்களை நாட்டி உணவு உற்பத்திக்குப் பாடுபட்டார். நீர் இறைக்கும் இயந்திரத்தை 1946-ம் ஆண்டு மக்கள் காணாத நேரத்தில் இரு இயந்திரங்களை வாங்கி நீர்ப்பாய்ச்சி பல திட்டங்களை வகுத்தார். இறக்கும் காலத்தில் முந்திரிகைத் தோட்டம் செய்ய முற்பட்டபோது காலன் கையில் அகப்பட்டுக்கொண்டார். இன்றைய சூழ்நிலையில் அவர் போன்றோர் இல்லாதது நாட்டிற்கு பெரும் நஷ்டமெனலாம். அவர் ஒரு விவசாய மன்னன்.

இவர் ஆசிரிய சமூகத்திற்கு ஓர் ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர். 1942-ம் ஆண்டு பாடத்திட்ட வழிகாட்டி நூலை பல பாடங்களுக்கு எழுதி வெளியிட்டார் இவரது யோசனையை கல்வித் திணைக்களம் இப்பவே செய்கிறது. ஆசிரியர்கள் இளைப்பாறும் காலத்தில் நலம் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் கிறிஸ்தவ ஆசிரிய சகாய நிதிச் சங்கத்தை 1944-ம் ஆண்டு ஆரம்பித்துத் திறம்பட நடாத்தி வந்தார். அதுவும் அவரது ஞாபகச் சின்னமாக தற்போது திகழ்கின்றது. 1946-ம் ஆண்டு மானிப்பாய் மெம்மோறியல் ஆங்கிலப் பாடசாலை இடம் பெறவேண்டியிருந்தது. சகல வசதியுடன் ஒரு கல்லூரியை அமைக்க மானிப்பாயில் இல்லாமல் மிஷன்சபையார் அயல் கிராமத்துக்குக் கொண்டு போக யோசித்த நேரத்தில் அப்பொறுப்பைக் கையேற்று தனது சாதுரியத்தால் தற்போதைய காணியை பெற்றார். இரவு பகலாக அயராத முயற்சியின் பலனாக இக்கல்லூரி உருவானது. இவரது விரிமுறைச் சிந்தனை ஆக்க முயற்சிகளில் மிகப் பெரியதாகப் போற்றவேண்டிய ஞாபகச்சின்னம் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை என்பதில் என்ன சந்தேகம்?

பொ. காங்கேசு,
(ஆசிரியன்)

## அருவிவெட்டிய பெண் திடீர் மரணம்

அனலைதீவு, வியாழன்

அருவி வெட்டிக்கொண்டிருக்கும்போது ஏற்பட்ட மாரடைப்பினால் பெண்மணி ஒருவர் உயிர் நீத்தார்.

இச்சம்பவம் அனலைதீவில் நடைபெற்றது. திருமதி பத்மநாதன் கண்மணி (வயது 19) என்பவரே இவ்விதம் மாண்டவராவர்.

இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கே. சிவஞானம் விசாரணை நடத்தினார். அருவிவெட்டிக்கொண்டிருக்கையில் இவர் திடீர் மாரடைப்புக்குள்ளானதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. நான்கு வயது நிறைந்த ஆண் குழந்தை ஒன்று இவருக்கு உண்டு. மாரடைப்பினால் மரணம் சம்பவித்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ஈ)

## பல்கலைக்கழகப் பிரவேசம்

### விரைவில் முடிவு தெரியும்

[கொழும்பு, வியா.]

பல்கலைக்கழகப் பிரவேசத்துக்குத் தகுதிபெற்றுள்ள மாணவர்கள் அனைவரையும் அனுமதிப்பது குறித்து கல்வியமைச்சர் பதியுதீன் மூகம்மது, உபவேந்தருடனும் ஐந்து பல்கலைக்கழக அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இடவசதியின்மையால் ஏற்பட்டுள்ள நிலைகுறித்து அமைச்சர் கலந்துரையாடினார்.

சகலராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் மாணவர் பிரவேசம்பற்றி அறிக்கை ஒன்றைத் தயாரித்து ஒருவாரத்துக்குள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கவிருப்பதாக பல்கலைக் கழக வட்டாரங்கள் கூறின.

வவுனியாவில்

## பெரியபுராணச் சொற்பொழிவு

வவனியா, வெள்ளி

வவனியா குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் பெரியபுராணச் சொற்பொழிவு நிகழ்த்த வவனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் ஏற்பாடுசெய்துள்ளது. சைவப்புலவர் திரு. செல்லத்துரை இச்சொற்பொழிவைத் தொடர்ந்துசெய்துவருவார். இதன் ஆரம்ப வைபவம் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் காப்பாளரும், வவனியா மேலதிக அரசாங்க அதிபருமான திரு. செ. சிவஞானம் தலைமையில் இன்று நடைபெறவிருக்கிறது. (அ)

## இரு பிரதி அமைச்சர்கள்

## கார்களைச் செலுத்தி பாலத்தை திறந்தனர்

(காலி, வியாழன்)

பத்தேகமவையும் பெந்தற எல்பிட்டியவையும் இணைக்கும் வகையில் ஜின்கங்கைக்குக் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பாலத்தில் இரு பிரதி அமைச்சர்கள் தமது உத்தியோகபூர்வமான கார்களை பாலத்துக்கு மேலாக ஓட்டிச் சென்றதின்மூலம் திறந்துவைத்தார்கள்.

பொது நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டமைச்சின் பிரதி அமைச்சரும் பத்தேகம தொகுதி எம். பி. யுமான திரு. டபிள்யு. நீல் டி அல்விஸும் தோட்டத் தொழில் பிரதி அமைச்சரும் பெந்தற எல்பிட்டிய தொகுதி எம். பி. யுமான திரு. அல்பேர்ட் காரியவாசமும் தமது கார்களை இப்பாலத்தின்மீது செலுத்தி அதனைத் திறந்துவைத்தார்கள்.

## மின் விநியோகம் விஸ்தரிப்பு

வேலணை, வியாழன்

பெரும்பாலும் இம்மாதம் முடிவடையவுள்ள கரம்பன் பகுதி மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் கரம்பன் மேற்கு முருகமூர்த்திகோவில் பகுதிக்கும் மின் இணைப்பை விஸ்தரிக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கையையடுத்து ஏற்கனவே 50 ஆயிரம் ரூபா செலவில் கரம்பனிலுள்ள சில பகுதிகளுக்கு மின் இணைப்புத் திட்டத்தை விஸ்தரிக்க அமைச்சு அனுமதியளித்துள்ளது ...

## ஆஸியநாடுகளின் தானிய சேமிப்பு

## இந்திய அமைச்சர் யோசனை

புதுடில்லி, பெப். 7

ஆஸிய நாடுகள் தமக்கென உணவுதானிய சேமிப்பு அமைப்பு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்று இந்திய நிதியமைச்சர் திரு. வை. பி. சவான் யோசனை கூறியிருக்கிறார்.

ஆஸிய வர்த்தகர்கள் மகாநாடொன்றில் நேற்றுப் பேசுகையில் இந்த யோசனையை அவர் வெளியிட்டார். தேசிய சேமிப்புகளில் நெருக்கடி ஏற்படும்போது சர்வதேச சேமிப்புக்களிலிருந்து பயன்பெற்றுக் கொள்ளலாம். எனவே ஆஸிய நாடுகளுக்கென உணவுதானிய சேமிப்புக் களஞ்சியம் ஒன்று ஏற்படுவது நல்லது என்றார் திரு. சவான்.

நான்காவது அனைத்துலகத்
தமிழாராய்ச்சி மகாநாடு
கலைநிகழ்ச்சிகள், வண்டிச்சவாரி,
ஊர்திகள் பவனி

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய கலைஞர்கள் தங்கள் சான்றிதழ்களை இதுவரை பெற்றுக் கொள்ளாதிருந்தால், எமது செயலகத்தில் விபரங்களைத் தந்து பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

வி. எஸ். துரைராஜா
தலைவர்,
கலை, கலாச்சாரக்குழு.

மகாநாட்டுச் செயலகம்
229, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூயஸ் கால்வாய் ஆறு மாதத்தில் கப்பல் போக்குவரத்திற்குத் திறக்கப்படும்!

## எகிப்திய மந்திரி சபை தீர்மானம்

கெய்ரோ, பெப், 7

இன்னும் ஆறு மாதங்களில் சூயஸ்கால்வாய் போக்குவரத்துக்கு திறந்துவிடப்படும்.

எகிப்திய மந்திரிசபை இது பற்றி முடிவு செய்திருப்பதாக அரசாங்கசார்பு பத்திரிகை அல்அஹ்ரம் இச்செய்தியை வெளியிட்டிருக்கின்றது.

சூயஸ்கால்வாயை சுத்திகரித்து சீர்படுத்துவதற்கான வேலைகளை உடனடியாக ஆரம்பிப்பதென்றும் எகிப்திய மந்திரிசபை முடிவு செய்திருப்பதாக அல்அஹ்ரம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமிடையில் படைவிலகல் சம்பந்தமாக அண்மையில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டின் முதல் கட்டம் இப்பொழுது பூர்த்தியாகியுள்ளது. இதைத்தொடர்ந்து உடன்பாட்டின் இரண்டாவது கட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இதே சமயம் சிரியாவுக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான கோலான் குன்றும் பகுதியில் தொடர்ந்து மோதல்கள் இடம் பெற்றுவருகின்றன. இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிவருகின்றனர்.

இதற்கிடையில் இப்பகுதியில் படைவிலகலை மேற்கொள்வதற்காக இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிரியாவிலுள்ள இஸ்ரேலிய போர்க்கைதிகளின் விபரம் பற்றிய பட்டியலை சிரியா தர வேண்டும் அதே சமயம் அவர்களை செஞ்சிலுவைச் சங்கத்தினர் போய்ப்பார்ப்பதற்கும் அனுமதிக்கவேண்டும். இல்லாதபட்சத்தில் சிரியாவுடன் எந்தவித பேச்சுக்களையும் வைத்துக்கொள்ள முடியாது என்று இஸ்ரேல் கண்டிப்பாகக் கூறிவருகின்றது.

## புயல்கள் பற்றிய பட்டியல்

(விளாடிவஸ்டாக், பெப் 6)

விளாதிவாஸ்தாக்கிலுள்ள நீரியல்-வானியல் கழகத்தின் நிபுணர்கள், புயல்களின் பட்டியல் ஒன்றைத் தொகுத்துள்ளனர்.

கடந்த 20 ஆண்டுகளில் வட-மேற்கு பசுபிக்கைக் கடந்துள்ள 500க்கு மேற்பட்ட புயல்களை இந்தப் பட்டியல் வருணிக்கின்றது.

புயல்கள் எவ்வாறு உருவாகின்றன, அவற்றில் கூடுதல் வேகம் முதலிய பல தகவல்களை இது தருகின்றது. இந்தக் கழகத்தின் வசம் எட்டு ஆய்வுக் கப்பல்கள் உள்ளன. ''புயல்களின் கூடு'' என்று வருணிக்கப்படும் பிலிப்பைன் கடலில் அவை அடிக்கடி பயணம் செய்கின்றன.

## லிபியா எண்ணெய் அமெரிக்கா செல்கிறதா?

மாஸ்கோ, பெப். 7

லிபியா அமெரிக்காவுக்கு தொடர்ந்தும் எண்ணெய் ஏற்றுமதி செய்கிறதென்று வெளிநாட்டு பத்திரிகைகளில் பல்வேறு செய்திகள் வெளிவந்துள்ளன.

இதுமாதிரியான செய்திகள் இத்தாலியப் பத்திரிகைகளிலும் சுவிட்சலாந்து ''நியூ ஸூர்ச்சர் செய்துங்'' பத்திரிகையிலும் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலேயே வெளியாகியுள்ளன.

லிபியா துறைமுகமான பென்காஸியிலிருந்து புறப்படும் பனமாநாட்டில் ரெஜிஸ்தர் செய்யப்பட்ட எண்ணெய்க் கப்பல்கள் மத்திய தரைக்கடலில் நடமாடும் அமெரிக்க 6-வது கடற்படைக்கு எண்ணெய் சப்ளை செய்வதாக ''குரியரே டெல்லா சேரா'' பத்திரிகை செய்தி பிரசுரித்துள்ளது. அரபுநாடுகளு எண்ணெய் பகிஷ்கரிப்பு தொடங்கியகாலம் தொடக்கம் அமெரிக்காவுக்கு 'ஒழுங்' சென்ற எண்ணெயின் சரிபாதி லிபியாவிலிருந்து வந்தது என்று லண்டன் ''டைம்ஸ்'' கூறியது.

அரபுநாடுகளின் பொதுக் கொள்கையை மீறவேண்டாமென்று லிபியாவை எண்ணெய் ஏற்றுமதிசெய்யும் அரபுநாடுகள் கோரியுள்ளதாக ''அல்ஹயசத்'' கூறியுள்ளது.

## குஜராத்தில் பிரச்னைகளைத் தீர்க்க

# வன்முறைகள் ஓய வேண்டும்

— இந்திரா காந்தி

புதுடில்லி, பெப் 7

குஜராத்தில் வன்முறைகள் யாவும் ஒரு முடிவுக்குகொண்டு வரப்பட வேண்டுமென்று இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

வன்முறைகள் ஒரு முடிவுக்கு கொண்டுவரப்பட்டால் தான் பிரச்னைகளை ஆராய முடியும். அமைதியை முதலில் நிலைநாட்டவேண்டும். அதன் பிறகுதான் பல்வேறுபட்ட பிரச்னைகளையும்கேட்டுஅறிந்து நடவடிக்கைகள் எடுக்கமுடியும் என்றார் அவர்.

உத்தரப்பிரதேசத்தில் பல கூட்டங்களில் நேற்று உரை நிகழ்த்திய இந்திய பிரதமமந்திரி மக்களின் சிரமங்களை அரசு உணர்ந்திருக்கின்றது. அவைகளைக் கிளர்ச்சிமூலம் தீர்த்துவிடமுடியாது என்றார்.

அயல்நாடுகள் ஆயுதங்களை வாங்கிக் குவித்துவருவது பற்றியும், இந்துசமுத்திரத்தில் வல்லரசுகள் நடவடிக்கையையும் இந்தியா உன்னிப்பாக கவனித்துவருகின்றது என்றும் இவை இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியது என்றும் அவர் சொன்னார்.

## இந்தியாவில் புதிய பிரி. தூதர்

(புதுடில்லி, பெப் 7)

இந்தியாவில் புதிய பிரிட்டிஷ் தூதுவராக திரு. மைக்கல்வோக்கர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று இந்திய ஜனாதிபதி திரு. வி. வி. கிரியிடம் தமது நியமனப்பத்திரங்களை சமர்ப்பித்தார்.

# ஜாப். விமானம் குவைத்தில் இறங்க அனுமதி மறுப்பு

குவைத், பெப். 7

ஜப்பானிய விமானம் இறங்குவதற்குக் குவைத் அரசு அனுமதியளிக்க மறுத்துவிட்டது.

சிங்கப்பூரிலிருந்து நான்கு தீவிரவாதிகளை ஏற்றிக் கொண்டு இந்த விமானம் குவைத் வரவிருந்தது.

குவைத்திலுள்ள ஜப்பானியத் தூதரகத்தை ஆக்கிரமித்துக்கொண்டுள்ள ஆயுதம் தரித்த பயங்கரவாதிகள் சிங்கப்பூரில் எண்ணெய்க் கம்பனி ஒன்றின் படகொன்றைக் கைப்பற்றிவைத்திருக்கும் 4 பயங்கரவாதிகளையும் விடுவிக்க வேண்டுமென்றும் இவர்களைப் பத்திரமாக வேறு நாட்டுக்கு ஏற்றிச்செல்ல ஜப்பானிய அரசு ஏற்பாடுசெய்யவேண்டுமென்றும் கோரியிருந்தார்கள். இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாவிடின் தூதரகத்திலுள்ள அதிகாரிகள் ஒவ்வொருவராகக் கொல்லப்படுவார்கள் என்றும் பயமுறுத்தியிருந்தார்கள். ஜப்பானியத் தூதுவரும் இதில் அகப்பட்டிருக்கிறார்.

இவர்களின் கோரிக்கையின் பேரில் சிங்கப்பூரிலிருந்து அந்த நான்கு பயங்கரவாதிகளையும் குவைத்துக்கு விமானத்தில் ஏற்றிச் செல்ல ஜப்பானிய அதிகாரிகள் ஏற்பாடு செய்தனர். ஆனால் இந்த விமானம் குவைத்தில் இறங்குவதற்கு அனுமதிக்க முடியாதென்று குவைத் அரசு மறுத்துள்ளது.

## பிரஷ்னேவுக்கு கியூபாவின் மிகஉயர்ந்த விருது

(ஹவானா, பெப். 7)

சோவியத் தலைவர் பிரஷ்னேவுக்கு ''ஜோஸ் மார்ட்டி விருது'' வழங்கப்பெற்றது.

''சர்வதேச ஒருமைப்பாட்டை வலுப்படுத்துதல் என்ற இலட்சியத்திற்கும், ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம் மற்றும் நவீன காலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்திற்கும், கியூபா புரட்சியுடன் நட்புறவை வலுப்படுத்தும் இலட்சியத்திற்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் ஆற்றிவரும் தலை சிறந்த பங்கிற்காக இந்தவிருது வழங்கப்பெற்றுள்ளது.

## கட்டாயலீவில் அதிபர்

கொழும்பு, வியா.

கண்டியிலுள்ள பிரபல கல்லூரியொன்றின் அதிபர் கல்வியமைச்சினால் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார்.

இக்கல்லூரி கணக்கு வழக்குச் சம்பந்தமாக கல்வியமைச்சின் கணக்குப்பரிசோதனைப் பிரிவு சமர்ப்பித்த அறிக்கையொன்றையொட்டியே மேற்படி கல்லூரி அதிபர் கட்டாய லீவில் அமைச்சினால் அனுப்பப் பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவ்விடயம் சம்பந்தமாக கல்வியமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் விசாரணை நடத்திவருகிறார்.

## நெற்கதிர் சாக்குடன் பிடிபட்டது

பருத்தித்துறை, வியா

வரணி மூத்தெட்டுப்பகுதியில் வயலில் களவாக வெட்டப்பட்ட நெற்கதிர்கள் சாக்குகளுடன் பொலிசாரால் பிடிக்கப்பட்டன. வயல் சொந்தக்காரர் வயல் காவலாளியைச் சந்தேகநபருள் ஒருவராகக் கூறியதன் பின்னர் பொலிசார் இருவிடைக் கண்டுபிடித்தனர். இருவர் நபர்மீது பொலிசார் வழக்குத் தொடரவிருக்கின்றனர்.

இவ்வித திருட்டுக்கள் கரவெட்டிப் பகுதியிலும் அதிகரித்து வருவதால் தொண்டர் படைகள் சேர்ந்து சுற்ற ஆரம்பித்துள்ளன. (அ)

## பிரி. போதனா முறையைப் பாராட்டுகிறார்கள்

லண்டன், பெப். 7

''பிரிட்டனிலுள்ள செயல்முறை கலந்த கல்விமுறை என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளது'' எனக் கூறுகிறார் திரு. டல்லி தலவில. இருபத்தேழு வயதுடைய இவ்விலங்கை மாணவர் கடந்த நான்கு வருடங்களாக பிரிட்டனில் சிவில் பொறியியல்துறையில் பயின்று வருகின்றார்.

திரு. தலவில தென்மேற்கு இங்கிலாந்திலுள்ள பிளைமத் பொலிடெக்னிக்கில் சிவில் பொறியியலில் பி. எஸ். ஸி. பட்டம் பெறுவதற்கான படிப்புகளில் ஈடுபட்டு வருகிறார். இப்படிப்புகள் 1975-ம் ஆண்டு முடிவுறவுள்ளன.

தாயகம் திரும்பியதும் ஆசிரியத் தொழிலைத் தான் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்த திரு. தலவில, பிரிட் [illegible] ராகப் பணியாற்றியதை [illegible]

## டியாகோகார்ஸியாத் தீவில்

# யு. எஸ். ராணுவத்தளம்: இந்திய அரசு கவலை

புதுடில்லி, பெப். 7

டீகோகார்ஸியா தீவில் அமெரிக்க ராணுவத்தை விஸ்தரிப்பதற்கு முடிவுசெய்யப்பட்டிருப்பது குறித்து இந்திய அரசு பெரிதும் கவலை கொண்டுள்ளது.

இந்தீவில் அமெரிக்கா தனது ராணுவத்தை விஸ்தரித்துக்கொள்ள பிரிட்டிஷ் அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. இந்தியாவிலிருந்து சுமார் 1000 மைல் தொலைவில் இந்தத்தீவு இருக்கின்றது.

இந்து சமுத்திரப் பிரதேசம் அமைதிப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தப் படவேண்டும் என்று ஐ. நா. தீர்மானம் நிறைவேற்றியிருப்பதை இந்தியா சுட்டிக்காட்டியிருக்கிறது. இத்தீர்மானத்தை அணிசாரா நாடுகளுடன் ஆஸ்திரேலியாவும் ஆதரித்திருப்பதை இந்தியா குறிப்பிட்டுள்ளது.

இலங்கை-இந்தியப் பிரதமர்கள் சமீபத்தில் புதுடில்லியில் கூடிப்பேசிய போதும் இந்து சமுத்திரப் பிரதேசம் வல்லரசு கெடுபிடியிலிருந்து விடுவிக்கப் படவேண்டுமென்றும் இப்பகுதி அமைதிப் பிரதேசமாக விளங்கவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

டீகோகார்ஸியாவில் அமெரிக்க ராணுவத்தளம் நீடிக்க வசதியளிப்பதென்று பிரிட்டன் முடிவுசெய்துள்ளது இந்தியாவைப் பெரிதும் கவலைக்குள்ளாக்கியிருப்பதுடன் இந் நடவடிக்கைக்கு எதிராக சர்வதேச கருத்தை உருவாக்கத் தொடர்ந்து முயற்சி எடுக்கப் படுமென்று இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. சுவர்ண சிங் கூறியிருக்கிறார்.

### சோவியத் கண்டனம்

டீகோகார்ஸியாவில் அமெரிக்க ராணுவத்தளம் அமைவிருப்பது குறித்து சோவியத் பத்திரிகை ஒன்று கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்துசமுத்திரப் பிராந்தியம் அமைதிப் பிராந்தியமாக விளங்கவேண்டுமென இந்தியாவும், இலங்கையும் வலியுறுத்தியிருப்பதை இப்பத்திரிகை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் குறைபாடுகளை பிரதமரிடம் தெரிவிப்பாராம்

சுழிபுரம், வியா.

"ஐந்து வருடத்துக்கு ஒரு முறை வந்துபோகும் அமைச்சர் அல்ல நான். உங்கள் தேவையை நிறைவேற்ற குறை நிறைகளை அறிய மாதம் தோறும் வந்துபோவேன். நீங்கள் இந்த நாட்டின் வளர்ச்சிக்காக வழங்கும் ஒத்துழைப்பைக்கொண்டு நாம் நல்ல எதிர்காலத்தை உருவாக்குவோம் வாரீர் என்று அன்புடன் அழைக்கின்றேன். நீங்கள் தெரிவித்த கருத்துக்கள் குறைபாடுகள் யாவற்றையும் பிரதம அமைச்சரின் கவனத்துக்கு தெரிவித்து தீர்வுகாண்பேன்.

இவ்வாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வாலிப முன்னணி அமைப்பாளர் திரு. அனுரா பண்டாரநாயக்கா சுழிபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா வாலிப முன்னணிக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் வடபகுதியிலுள்ள இளைஞர்கள் தங்கள் பிரச்னைகளை எமது இயக்கமூலம் பேசித்தீர்க்கு வடபகுதியிலுள்ள தமிழ் அரசுக் கட்சியினரை கலைதூக்க முடியாது செய்துவிடலாம் என்றார்.

கல்வி, விவசாயம் போன்ற விடயங்களை எவ்வாறு தீர்க்கலாமென்ற உங்கள் ஆலோசனைகளை அறிந்து ஆவனசெய்வோம். வடபகுதியிலுள்ள தேசியப் பேரவை உறுப்பினர்கள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்" என்றார்.

வட்டுக்கோட்டைத் தொகுதி ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. வை. இராசசுந்தரம் பேசுகையில், "எமது நாட்டின் இரு பிரதமர்களின் புதல்வரான அனுரா பண்டாரநாயக்கா, தந்தை காட்டிய பாதையில் கருமங்களில் ஈடுபட்டுவருவது மிக்க மகிழ்ச்சியாகும். எமது பகுதியிலுள்ள இளைஞர்களின் குறைகளை அறிந்து தீர்ப்பதில் முயன்றுள்ள இச்சந்தர்ப்பத்தை இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்றார்.

அனுராவிடம் இளைஞர்கள் தங்கள், கல்வி, விவசாயம், உத்தியோகம் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளைத் தெரிவித்தனர். திரு. வை. இராசசுந்தரம் தமது இல்லத்தில் அனுராவுடன் வந்த கோஷ்டியினருக்குப் பகற்போசன விருந்தளித்தார்.

தேவத்தைப் பேராலயத்

## திறப்பு விழாவில் இரண்டு லட்சம் பக்தர்கள்!

ருகமை, வியாழன்

1948ம் ஆண்டு 14ந் திகதி அடிக்கல் நாட்டப்பட்ட ருகம இலங்கைநாயகி தேவாலயம் நேற்று மிகவும் கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டது

மேற்படி தேவாலயத்தை நேற்றுக் காலை 11 மணிக்கு கருதினால் தோமஸ் கூரே ஆண்டகை [illegible] பிரதாய முறைப்படி திறந்துவைத்தார். இவ் வைபவத்தைப் பார்ப்பதற்காக இலங்கையின் சகல பாகங்களிலுமிருந்து இரண்டு லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கூடியிருந்தார்கள்.

இவ்வாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் இலங்கைநாயகியின் திருச்சொரூபம் 1952ம் ஆண்டு டிசம்பர் 11ந் திகதி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்த வைபவத்தையொட்டி பரிசுத்த பாப்பாண்டவரினால் அனுப்பப்பட்ட விசேஷ ஆசீர்வாதச் செய்தியை வண. பிதா ஏர்னஸ்ட் பேருதொட்ட வாசித்தார். (அ)

## சாவகச்சேரியில் நாளை வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாலிப முன்னணி அமைப்பாளர் திரு. அனுரா பண்டாரநாயக்காவுக்கு நாளை சாவகச்சேரியில் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் சாவகச்சேரித் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் பரிஸ்டர் எம். ஆனந்தம் தலைமையில் நாளைக் காலை 10 மணிக்கு இவ்வரவேற்பு நடைபெறும்.

இவ்வரவேற்பில் பெலியத்தை தேசியப்பேரவை உறுப்பினர் திரு. மகிந்தா ராஜபக்ஷவும் கலந்துகொள்வார். சாவகச்சேரித் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளையினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர். (க-அ)


உறுதியானதும்

நீடித்து உழைப்பதும்

தன்னிகரற்றதுமான

**வைத்திலிங்கம்ஸ்**

இரும்பு - பித்தளை - மரஸ்குறு

ஆணிகளை

**நீங்கள் வாங்குவதனால்**

ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு

உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்

என்பதை மறவாதீர்கள்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்

450, பழைய சோனக தெரு, கொழும்பு-12

தொலைபேசி: 33143—4

கிளை: 138, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530


## இன்றைய பலன்

தை மீ 6-ந் திகதி
(8-2-74)

மேடம்: வித்தையில்வெற்றி காணும், வேண்டியதுகிடைக்கும், பொதுமக்கள் தொடர்புடன் புகழ்வந்து சேரும்.

ரிஷிபம்: இதயத்தில் பூரிப்பு இன்பத்தின் சாயலுடன் இல்லறமும் சிறக்கும், கரும்பு போல் இனிக்கும் காரியங்களுண்டு.

மிதுனம்: அற்பவிடயத்திற்கும் ஆத்திரமடைவீர். நெருங்கிய நண்பர் ஒருவரைப்பகைத்துக் கொள்ளநேரிடலாம்.

கடகம்: வாழ்க்கைப்பூங்காவில் வசந்தம் நிலவும், சுபகருமங்கள் நடைபெறும், சுற்றமும் சூழும்.

சிம்மம்: பக்கத்தில் படுகுழி பார்த்திருப்பவர் பகைவர் விழிப்புடன் இருப்பின்வெற்றி உனதே.

கன்னி: ஆபத்து மிகவும் உண்டு, அடுத்துக்கெடுப்பதற்கு எதிரி அருகில் இருப்பர், எதையும் ஆராய்ந்து பார்ப்பதேநன்று.

துலாம்: அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும், ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும்.

விருச்சிகம்: கன்னல் போல் வாழ்வு, கருதினில் காதல்மோதும் மின்னல்போல் மறைவும், இன்றே வாட்டிடும் பிணியும்தானே.

தனுசு: புதுமையான எண்ணங்கள் தலை தூக்கும் புதிய அனுபவங்கள்கிடைக்கும் குறிக்கோளில் வெற்றியுண்டு.

மகரம்: குழப்பமான சம்பவங்கள் இடம்பெறும். வாழ்க்கையில் பசுமைதோன்றும், களஸ்திர வழியால் லாபம் கிடைக்கும்.

கும்பம்: எண்ணியதில் தடைகள் தோன்றும், ஏமாற்றம் தாக்கும், நண்பர்களும் காலைவாரி விடக்கூடும்.

மீனம்: பிறருக்குஉதவுவதில் முன்நிற்பீர்கள். இதன் மூலம் பணமும் செலவாகும், அரசியல் வாதிகளுக்கு நல்லதினம்.

சோதிடக் கலைமதி
திருமதி க. வேலுப்பிள்ளை

## திடீர்ப் பரிசோதனை

கோட்டை, வியாழன்

விலைக் கட்டுப்பாட்டு திணைக்கள உத்தியோகத்தர்களால் தற்போது நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள கூட்டுறவுச் சங்கக்கடைகளைத் திடீர்ப் பரிசோதனை செய்கின்றனர்.

விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. வில்பிரட் ஜெயசூரியாவின் உத்தரவின்பேரிலேயே மேற்படி திடீர்ப் பரிசோதனைகள் இடம்பெறுகின்றன.

பாவனையாளர்களுக்கு வேறு எங்கும் பெறமுடியாத உணவு மற்றும் பாவனைப் பொருட்கள் யாவும் மேற்படி சங்கக் கடைகள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படுவதால் இவ் விநியோகத்தில் மோசடிகள் எதுவும் இடம்பெறாமல் இருப்பதற்காகவே திரு. ஜெயசூரியா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## 'அறிவு வளர்ச்சிக்கு வாசிகசாலை'

கல்வியங்காடு, வியா

'தொழிலாளர்கள் அறிவின் வளர்ச்சியடைவதற்கு தங்கள் ஓய்வு நேரங்களை வாசிகசாலைகளில் செலுத்த வேண்டும். வீண்பொழுது போக்குவதை விடுத்து வாசிகசாலைகளில் பயன்படுவதால் நன்மைகள் பல கிடைக்கும்.'

ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சங்கத்தினரால் அமைக்கப்பட்ட வாசிகசாலையில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூட்டுறவு [illegible] திரு. சி [illegible] வேறுகவிட்டார் [illegible].

# முள்ளுக்கம்பி விலை அந்தர் 280 ரூபாவாக அதிகரிப்பு!

(கொழும்பு, வியா)

முள்ளுக்கம்பியின் விலை அந்தர் 280 ரூபாவாக அதிகரித்துள்ளது. இரும்பு வலைகளின் விலையும் அந்தர் 305 ரூபாவாக அதிகரித்துள்ளது.

முன்னர் முள்ளுக்கம்பியின் விலை அந்தர் 168 ரூபாவாக இருந்தது. இம்மாதம் 1-ம் தேதி முதல் அந்தர் 280 ரூபாவாக அதிகரித்துள்ளது. முன்னர் இரும்பு வலையின் விலை அந்தர் 245 ரூபாவாக இருந்தது. இப்பொழுது அந்தர் 305 ரூபாவாக அதிகரித்துள்ளது.

உருக்கு, கூட்டுஸ்தாபனம், முள்ளுக்கம்பி, வலை ஆகியவற்றின் விலையை 60 சத வீதத்தால் திடீரென அதிகரித்துள்ளது மற்றும் கட்டிடப் பொருட்களின் விலையிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் செலவு அதிகரித்ததையடுத்தே இருப்பு, [illegible] ருக்குப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது. (க-அ)

# சீமெந்து விலையும் விரைவில் அதிகரிக்கும்?

(கொழும்பு, வியா)

சீமெந்தின் விலையும் விரைவில் அதிகரிக்குமெனத் தெரிய வருகிறது.

சீமெந்து உறையின் விலை உயர்ந்துள்ளதாலும், எரிபொருளின் விலை பெருமளவில் உயர்ந்துள்ளதாலும், போக்குவரத்து கட்டணம் அதிகரித்துள்ளதாலும் சீமெந்தின் விலையை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த வருடம் தொழிலாளருக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதும் இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

இந்தக் காரணங்களினால் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தே சீமெந்தின் விலை அதிகரிக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது. (அ)

## அனுரா நாளை உடுப்பிட்டி செல்வார்

பருத்தித்துறை, வியா

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாலிப முன்னணித் தலைவர் திரு அனுரா பண்டாரநாயக்கா இம்மாதம் 9-ம் திகதி சனிக்கிழமை உடுப்பிட்டித் தொகுதிக்கு விஜயம் செய்கிறார்.

இத்தொகுதியிலுள்ளவாலிப முன்னணிக் கிளைகள், ஆசிரியர்சங்கப் பிரதிநிதிகள், அதிபர்கள் ஆகியோருடன் கட்சியின் வளர்ச்சிபற்றியும் பொதுப் பிரச்னைபற்றியும் அவர் கலந்துரையாடுவார். அன்று மாலை உடுப்பிட்டிக் கட்சி அமைப்பாளர் திரு. ரி. இராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்திலும் அவர் உரை நிகழ்த்தவிருப்பதாகத் தெரிகிறது. (அ)

## பிரிட்டிஷ் கப்பலில் கஞ்சா

(கோட்டை, வியா)

பிரிட்டிஷ் கப்பலொன்றில் கஞ்சா வைத்திருந்த அக்கப்பலின் மாலுமி ஒருவருக்கு 3000 ரூபா குற்றம் விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ளது.

பிரஸ்தாப கப்பலின் பக்கத்தே சுமார் ஆறு றாத்தல் கஞ்சா மிதந்துகொண்டிருந்ததைக் கண்ட பொலிசார் சந்தேகத்தின் பேரில் கப்பலைச் சோதனையிட்டபொழுதே மேற்படி மாலுமியிடம் இரண்டு றாத்தல் கஞ்சா இருப்பதைக் கண்டுபிடித்து அதைப் பறிமுதல் செய்தனர்.

இந்தக் கப்பல் மாலுமிகளுக்கு எப்படிக் கஞ்சா கிடைக்கிறதென்றும், எவ்வாறு கடத்தப்படுகிறதென்றும் பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

நெல் அறுவடையில்

## மாணவரும் ஆசிரியரும்

பருத்தித்துறை, வியா

நெல் அறுவடை காரணமாக இவ்வாரம் சில பாடசாலைகள் கரவெட்டிப் பகுதியில் மூடப்பட்டுள்ளன. பாடசாலை ஆசிரியரும் மாணவரும் நெல் அறுவடையில் ஈடுபட வேண்டுமென்னும் நோக்குடனும் வருடத்தின் முதல் தவணையாகையால் மாணவரின் கல்வி அதிகம் பாதிக்காது என்ற நம்பிக்கையுடனுமே பாடசாலைகள்மூடப்பட்டுள்ளன. மூடப்பட்ட தினங்களுக்காக மேலதிக பாடசாலை நேரங்கள் சனி வாரங்களில் வைக்கப்படும் என அறியப்படுகிறது. (அ)

## மட்டக்களப்பில் சாயி அகண்டநாம பஜனை

(மட்டக்களப்பு, வியா)

மட்டக்களப்பு பகவான் ஸ்ரீ சத்ய சாயி பஜனை மண்டலியின் அகண்டநாம பஜனை அடுத்த மாதம் 9-ந் திகதி நடைபெறவிருக்கிறது. அன்று அதிகாலை 4-30 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும் இவ் அகண்ட நாம பஜனை மாலை 6 மணி வரை நடைபெறும். இலங்கையிலுள்ள சகல சாயி சமிதிகள், பஜனை மண்டலிகள் அனைத்தும் இப்பஜனையில் கலந்துகொள்வது மட்டுமல்லாமல் தங்கள் தங்கள் பஜனைக் குழுக்களும் பஜனை செய்ய வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளனர். வெளியிலைகளிலிருந்து வரும் பஜனையில் கலந்துகொள்வோரின் உணவு இருப்பிட வசதிகள் மண்டலியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (அ)

## அண்ணா நினைவு தினவிழா

சுழிபுரம், வியா

பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினர் மறைந்த அறிஞர் அண்ணா நினைவுதினத்தை விமரிசையாக இவ்வாரம் கொண்டாடவுள்ளனர். தமிழ் தலைவர்கள் பலர் பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (அ)

## 'இவர்களையும் சேர்க்கவும்'

சுழிபுரம், வியா

'அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 5 நாள் வேலைத்திட்டத்தில் சுகாதார இலாகாவில் மருந்து கலவையாளர்களாகக் கடமையாற்றும் டிஸ்பென்சர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அத்தியாவசிய சேவை என்று இவர்களை அரசாங்கம் கருதும் பட்சத்தில் சனிக்கிழமைகளில் கடமையாற்றுபவர்களுக்கு விடுமுறை நாட் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.'

இவ்வாறு தாய்ச்சங்கத்தைக் கோரும் அவசர தீர்மானம் ஒன்று இம்மாதம் 3ம் திகதி நடைபெற்ற அரசாங்க டிஸ்பென்சர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்திற்கு மேற்படி கிளைத் தலைவர் திரு. கே. நடராசா தலைமை வகித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீதர் சினிமா
யாழ்ப்பாணம்
சிவாஜி-ஜெயலலிதா
ஜெமினி-சாவித்திரி
நடித்த
தினசரி 4 காட்சிகள்
கந்தன் கருணை
[ஈஸ்ட்மென் கலர்]


ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ வி எம் ராஜன்
நிர்மலா
அவள்

ராஜா
[யாழ்ப்பாணம்]
தினசரி காலை 10-30, பி.ப.2-30
6-15, இரவு 9-45
சிவாஜி - ஜெயலலிதா
நடித்த
ராஜா
( புதிய கொப்பி - ஈஸ்ட்மென்கலர் )

றியோ (நகர மண்டபம் யாழ்ப்பாணம்)
Daily 9-45 p. m.
Gregory Peck
in
STALKING MOON
கடைசி வாரம்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30
முத்துராமன் - நிர்மலா - ஜெய்சங்கர் - நாகேஷ்
நீதி தேவன்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - அசோகன்
ஜெயலலிதா - மனோரமா.
நடித்த
எங்கள் தங்கம்

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி காலை 10-30, 2-30, 6-30, 9-30
★ தமிழகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.
★ தமிழ்த்திரை உலகிலேயே இதுவரை செய்யப்படாத புதுமை இந்தப்படத்தில் புகுத்தப்பட்டிருக்கிறது.
சிவாஜி - கே. ஆர். விஜயா - முத்துராமன்
பாலாஜி - நாகேஷ் ராஜ்ஸ்ரீ - மனோகர்
எம். ஆர். ஆர். வாசு நடித்த
ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ் தயாரித்த
சொர்க்கம்
டைரக்ஷன்
ராமண்ணா
ஈஸ்ட்மென் கலர்



சிலோன் (யாழ்ப்பாணம்)
10-00, 2-00, 6-00, 9-30 தினசரி
ஆஷா பரேக்
ஹெலன்
நடித்த
கரவன்

## பிரிட்டன் தேர்தல் 28ல்

லண்டன், பெப். 7

பிரிட்டனின் பொதுத் தேர்தல் இம்மாதம் 28-ம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இலட்சத்து 80 ஆயிரம் சுரங்கத் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்வதைத்தொடர்ந்து இந்த திடீர்த்தேர்தல்நடைபெறுகிறது. இம்மாதம் 8-ந் திகதி தற்போதைய மந்திரிசபை கலைக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது. (ஈ)

## பருத்தித்துறையில் அனுரா

நெல்லியடி, வியாழன்

பருத்தித்துறைக்கு இன்று விஜயம் செய்த திரு. அனுரா பண்டாரநாயக்காவும், அவருடன் வந்திருந்த வெலியத்தை எம். பி. திரு. மகிந்தா ராஜபக்சாவும், பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலயத்துக்குச் சென்று விசேட பூசையில் கலந்துகொண்டனர்.

நகரசபைத் தலைவரும், பருத்தித்துறை தொகுதி ஸ்ரீ. ல. சு. கட்சிஅமைப்பாளருமான திரு. ந. நடராசா தலைமையில்நடைபெற்ற வரவேற்புக் கூட்டமொன்றில் திரு. அனுராவும், திரு. மகிந்தாவும் பேசினர். முன்னாள் செனட்டர் நிக்சன்டி சில்வாவும் இவர்களுடன் வந்திருந்தார். (ஈ)

## ஆட்சி மன்றத்தில் யாழ். மாநகரசபை

[கொழும்பு, வியா.]

யாழ்ப்பாணம், கண்டி, மாத்தளை ஆகிய மாநகரசபைகளின் சாதனப்பகுதி சம்பந்தப்பட்ட பொதுவிதிகள் மாற்றியமைக்கும் உபவிதி இன்று ஆட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இதனைச் சமர்ப்பித்திருந்தார்.

பொலிஸ்படை சம்பந்தப்பட்ட திருத்த மசோதாவும் இன்று ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. [ஈ]

## வடக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் எண்ணெய் கிடைக்குமானால் நாட்டின் பொருளாதாரத்தில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படச் சாத்தியமாகும் என்று பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறினார்.

நாகம்மி
(கிளிநொச்சி)
தினசரி 4-30, 7 & 9-45
BUCK AND THE PREACHER
[சிட்னி பொயிட்டர் நடித்த சண்டைப்படம்]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினி - ஜெயந்தி
புன்னகை

சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
யார் நீ
வெ. ச. 4-15 ஞா 10-30
THEY ONLY KILL THEIR MASTERS

REGAL (Jaffna)
Daily 4-45, 7, 9-30 p.m.
Michael Caine
in
GET CARTER
(color)

# ஜோர்டானில் இராணுவப் பிரிவுகள் மத்தியில் மோதல்

அம்மான், பெப். 7

ஜோர்டானில் ஆயுதப்படைகளுக்கிடையில் மோதல்கள் ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து பிரிட்டனுக்கு விஜயம் செய்திருந்த மன்னர் ஹுசெயின் அவசரமாக அம்மானுக்கு திரும்பிவந்திருக்கிறார்.

ஜோர்டான் ராணுவத்தின் 32-வது பிரிவு அம்மான் வானொலி நிலயத்தை முற்றுகையிட்டிருப்பதாகவும் ராணுவ நிலையை வளைத்துக் கொண்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

எண்ணெ சுத்திகரிப்பு நிலையம் ஒன்றையும் ராணுவத்தினர் வளைத்துக்கொண்டுள்ளனர். மன்னரின் அரண்மனைகளில் ஒன்றையும் படையினர் முற்றுகையிட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. 100க்கு மேற்பட்ட ராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். அசம்பாவிதம்

## பகிரங்க விசாரணைக்குழு நியமிக்க அனுரா கோரியுள்ளாராம்

(புங்குடுதீவு, வியாழன்)

''சுமூகமாகத் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினைகள் தீவிரவாதிகளின் தலையீட்டினாலேயே இதுவரை காலமும் தீர்க்கப்படாமலுள்ளது. இருசாராரும் தங்களுடைய பிரச்னையை மனம்விட்டுக் கலந்து பேசவேண்டும். பிரிவினை எண்ணம் கொண்டவர்கள் தமிழர் என்ற தப்பெண்ணத்தைச் சிங்கள மக்களிடையேயிருந்து அகற்றவேண்டும். வீண் குரோதங்களை வளர்க்ககூடாது''

இவ்வாறு அனுரா பண்டாரநாயக்கா நேற்று மாலை புங்குடுதீவு கிராமசபை மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேசுகையில் குறிப்பிட்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தீவுப்பகுதி இளைஞர் செயலாளர் திரு. சு. யோ. பூராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அனுரா மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தீவிரவாதிகளின் தலைமையை உதறி புதிய தலைமையின்கீழ் மக்கள் ஒன்றுசேரவேண்டும். சமதர்ம சமுதாய அமைப்பை ஏற்படுத்த இலங்கை மக்கள் எல்லோரும் ஒரே கொடியின்கீழ் ஒன்றுபடவேண்டும்.

உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு இறுதிநாள் சம்பவம் பற்றிக் குறிப்பிட்ட திரு. அனுரா, இது சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு பகிரங்க விசாரணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு தாம் அரசிடம் வற்புறுத்தியதாகவும் தற்போது நடைபெற்றுவரும் நீதிபதியின் விசாரணை முடிவுற்றதும் பகிரங்க விசாரணைக் குழு நியமிக்கும்படி தாம் மீண்டும் வற்புறுத்தவிருப்பதாகவும் கூறினார்.

வி. ச. தலைவர் திரு. கா. கதிரபரணம், வழக்கறிஞர் பி. கதிரவேலு ஆகியோர் இக்கூட்டத்தில் உரையாற்றினர். (வ)

# ஐ. நா. விசேஷ கூட்டம் இலங்கை ஆதரவு

(கொழும்பு, வியாழன்)

ஐ. நா. பொதுச்சபையின் விசேஷ கூட்டமொன்றை அழைக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு இலங்கையும் ஆதரவளிக்கவிருக்கின்றது.

உலக பொருளாதார நெருக்கடிகள் பற்றி ஆராய்வதற்காக பொதுச் சபையின் விசேஷக் கூட்டத்தை அழைக்கவேண்டும் என்ற கோரிக்கையை அல்ஜீரிய அதிபர் பூமதியான் முன்மொழிந்துள்ளார். இதனை யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோவும் ஆதரித்துள்ளார். இதனைத் தொடர்ந்து அங்கத்துவ நாடுகளின் கருத்தை தெரிவிக்கும்படி கோரி ஐ. நா. பொதுச் செயலாளர் எல்லா அங்கத்தவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

ஐ. நா. ஒழுங்கு விதிகளின்படி பொதுச்செயலாளர் இவ்வாறு கடிதம் எழுதிய 30 நாட்களுக்குள் பெரும்பான்மையான அங்கத்துவ நாடுகள் விசேஷ மகாநாட்டுக்கு ஆதரவு தெரிவித்தால் அம்மகாநாட்டை பொதுச்செயலாளர் கூட்டுவார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும்

## உட்கள விளையாட்டரங்கு ஒன்றுவது இருக்கும்

### விளையாட்டமைச்சர் உறுதி

காலி, வியாழன்

''நாட்டிலுள்ள 22 மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது ஒரு உட்கள விளையாட்டு மைதானமாவது இருக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்'' என்று விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. பி. ரத்நாயக்கா கூறினார்.

பத்தேகம கிறிஸ்துநாதர் தேவாலய மகளிர் கல்லூரியில் உட்கள விளையாட்டு நிலையம் ஒன்றைத் திறந்துவைத்து அமைச்சர் பேசினார்.

கூட்டத்திற்குப் பொது நிர்வாக, உள்நாட்டமைச்சுப் பிரதி அமைச்சர் திரு. நீல் டி அல்விஸ் தலைமைவகித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ரத்நாயக்கா தொடர்ந்து பேசுகையில், யாழ்ப்பாணத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியில் சுற்ற கல்விதான் இன்றும இப்போதைய உயர் நிலைக்குக் கொண்டுவந்துள்ளது என்றார்.

நான் விளையாட்டுத்துறை அமைச்சராகுமுன் எல்லா விளையாட்டுக்களும் கொழும்புக்கே வரையறுக்கப்பட்டிருந்தன. இவைகளை நான் கிராமப் பகுதிகளுக்கும் அமுல்படுத்தியதன் மூலம் அப்பகுதிகளிலும் இப்போது விளையாட்டுக்கள் சிறப்பாக வளர்ந்துவருகின்றன. 1971ம் ஆண்டுக்கு முன் எனது அமைச்சில் ஒரு பெண் ஊழியரும் இருக்கவில்லை. நான் 12 இளம் பெண்களை விளையாட்டுப்பகுதி அதிகாரிகளாக நியமித்துள்ளேன் என்றார் அமைச்சர்.

சோஷலிஸ நாடுகளில் விளையாட்டு, பாடசாலைகளில் ஒரு கட்டாய பாடமாகும் என்று குறிப்பிட்ட திரு. ரத்நாயக்கா உலக பில்லியார்ட் சாம்பியன் ஜிஹுப் லாபீருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

வைத்தியனின் குறைந்த வியாதியால் சாவதில்லை. அளவுக்கதிகமான மருந்தால்தான் சாவு.

—இந்திய மொழி

ஈழநாடு

(8-2-74)

# அனுரா அரசியல்

இன்று நிகழும் குரு மாற்றம் நாட்டுக்கு நன்மை தரும் என்பது சோதிடம்; இன்று மக்கள் படும் அவஸ்தையில் இவ்வித கூற்றுக்களில் நம்பிக்கை வைப்பதும் ஆறுதலடைவதும் இயற்கை.

யாழ்ப்பாணத்தின் அரசியல் வானில் தோன்றி மறைந்த நட்சத்திரங்கள் மக்கள் நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டன என்றால் அது மிகையாகாது. சமஷ்டி ஆட்சி, ஒற்றை ஆட்சி, சிறுபான்மையோருக்கு பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை, மாவட்ட சபை, தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து, யாழ்ப்பாணத்துக்கு ஒரு பல்கலைக்கழகம், இன்னும் எத்தனையோ பற்றி போராட்டப் பேச்சுகளும் இயக்கங்களும்!

இன்று மப்பும் மந்தாரமும் நிறைந்திருக்கும் வானிலை; ஏமாற்றமும் மனமுறிவும் நிரம்பிய தமிழ் மக்கள் விசேஷமாக யாழ்ப்பாண மக்கள் அரசியல் ஆசை வார்த்தைகளில் அதிக விருப்பம் காட்டாவிட்டால் அதில் வியப்பில்லை.

அண்மையில் நிகழ்ந்த சம்பவங்கள் நிலைமையை மோசமாக்கியதோடு, பொதுமக்கள் மத்தியில் வெறுப்பைப் புகுத்தி விட்டன. வாழ்க்கைப் பிரச்னையில் என்னென்ன மாறுதல்கள் கூடுதலாக ஏற்படுமோ என்று ஏங்கும் நிலையில் அரசியலுக்கு இடமேது என்ற கலங்கும் நிலை!

யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தை ஆதரிப்பவர்கள், பெருக்கெடுக்கும் ஆற்றுக்கு எதிரே நீந்தும் நீச்சல் வீரர்கள் என்று நாம் வர்ணிப்பது பொருத்தமாகும். பயமறியாத இவர்கள் எடுக்கும் பிரயத்தனங்கள் என்ன பலனளிக்கும் என்பது சோதிடத்துக்குமே அப்பாற்பட்டதாகும்.

இந்த அரசியல் பின்னணியிலே பிரதமரின் புதல்வனும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாலிபமுன்னணிப் பிரதம அமைப்பாளருமான திரு. அனுரா பண்டாரநாயக்காவின் யாழ்ப்பாண விஜயம் என்ன நோக்கைக் கொண்டது? பிரதமரின் இந்திய விஜயத்தில் இடம்பெற்ற புதல்வன் அனுரா இவை அரசியல் ரகசியங்களை யாழ்ப்பாண மக்களுக்கு அவிழ்த்து விட்டதன் காரணமென்னவோ?

இளைஞர்தலைவன் அனுரா யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய பேச்சில் இரண்டு காரியங்களைக் குறிப்பிட்டதாகச் செய்தி கூறுகிறது. இந்திய திராவிடமுன்னேற்றக் கழகத்துக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும் எதுவித உறவுமில்லையென்று இந்தியப் பிரதமர் உறுதியளித்திருக்கிறார் என்பது ஒன்று; தமிழரசுக் கட்சியினருடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்திருப்பதென்பது மற்றது.

கிராமபோன் தட்டுகளில் "எச். எம். வி." என்று ஒரு சரித்திரம் உண்டு; "தன்எஜமானின் குரல்" என்பதே அந்த மூன்று எழுத்துக்களின் அர்த்தமாகும். அனுராவின்பேச்சு, "தன்தாயாரின் குரல்" என்று நாம் அந்த "எச். எம். வி."க்கு அர்த்தம் பண்ணுவது சரியா? அப்படியானால் அவரின் பேச்சு எமது கவனத்துக்குரியது.

எது எவ்வாறாலும் அரசியல்வாதிகள், பிஞ்சு, காய், பழுத்தபழம் என்னவாயினும் யாழ்ப்பாண மக்களுக்கு வழங்காத வாக்குறுதி எதுவுமில்லை; குத்துக்கரணங்கள் போட்டவர்களும் இன்னும் அரசியல் மேடையைவிட்டு வெளியேறுவதாகக் காணோமில்லை. பிரச்னைகள் நிலவும் வரை தமக்கு இடமுண்டு என்ற நம்பிக்கையில் அவர்கள் காலங்கழிக்கின்றனர்; இதுவே தமிழ் மக்களின் துரதிர்ஷ்டம்!

"எதிர்காலம் இளைஞர் கையிலேயே தங்கியுள்ளது" என்ற உறுதிகொண்ட இளைஞர் தலைவன் யாழ். குடாநாட்டில் அடைபட்டுக் கிடக்கும் இளைஞர்களுக்கு வழிகாட்ட வல்லவரா? காலஞ்சென்ற அவரது தந்தையார் இழித் தெறிந்த பண்டா-செல்வா ஒப்பந்தத்தைப் பற்றி கவலைப்படுவது வீணாகும். இப்பகுதி இளைஞரின் மனப்போக்கை நன்றாகப் புரிந்துகொள்வது நாட்டின் வருங்காலத்துக்கு அவசியமாகும்; அவருக்கும் நல்ல பலனளிக்கும்.

அரசாங்கம் விட்டபிழைகளை மறக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கும் வாலிபர் தலைவன் அனுரா. இப்பகுதி மக்களின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெறுவதற்கு ஒரு வழிதான் உண்டென்பதை உணரவேண்டும். ஒப்பந்தங்களிலும் ஒற்றுமைப் பேச்சுகளிலும் ஏமாந்திருக்கும் தமிழ் மக்களை இன, மொழி, மத வேறுபாடற்ற நிதான அரசியல் கொள்கைகளாலும், அக்கொள்கைகளைத் தொழிற்படுத்துவதாலுமே இதைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுதான் அந்தவழி.

உலகப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் திறமை படைத்த அவரின் தாயார் நாட்டின் பிரதமர் உள்வீட்டுப் பிரச்னைகளைக் கண்டு தயங்குவதேனோ? "கருவிக்கடைக்கு நாணாத கோடரி சுருங்கத் தவித்தனுக்கு நாணும்", என்பதில் உண்மையுண்டு தான், மக்களை நேரில் சந்தித்து அவர்களின் மனக் கவலையை அறிவதே நிலையான அரசியலுக்கு அழகாகும்.

மகன் அனுராவைப் பின் தொடர்ந்து பலகாலும் யாழ்ப்பாணம் வரவிருக்கும் பிரதமர் ஒரு காலாவது இங்கு வரமுடியுமானால் நிலைமை திருந்த வழியுண்டு.

# ஈழத்துச் சிதம்பர புராணம்

1972-ல் ஈழத்தில் வெளிவந்த தமிழ் நூல்களுள் மிகச் சிறந்த முடிப்பு (அமைப்பு) உள்ளதாக ஈழத்துச் சிதம்பர புராணத்துக்கு தகைமைச் சான்றிதழை இலங்கை தேசிய நூற்சபையினர் வழங்கியுள்ளது மகிழ்ச்சியுடன் பாராட்டத்தக்கதாகும்.

இந்நூலை வெளியிட்ட காரைநகர் வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களால் உடல்நலக் குறைவின்மை காரணமாக கொழும்புக்கு நேரில் வந்து சான்றிதழைப் பெற முடியாததால் அவர் சார்பாக இந்த மாமன்ற துணைச்செயலாளர் கே. கே. சுப்பிரமணியம் அவர்கள் கல்வி அமைச்சில் நடைபெற்ற விழாவில் இப்பரிசிலைப் பெற்றார்.

வெறும் சான்றிதழ் அளித்ததுடன் இன்றி, இந்த பல நூல்களை தேசிய நூல்சபை வாங்கி நாட்டில் பல புத்தகசாலைகளுக்கும் பள்ளிக்கூடங்களுக்குமே வழங்கினால் அது பலவிதங்களிலும் பயனளிப்பதாக இருக்கும்.

இக்காலத்தில் இவ்வித நூல்களை வெளியிடுவது சுலபமன்று. அச்சகத்திற்கு இன்னும் பெருந்தொகை கொடுக்க வேண்டியிருப்பதாகவும் இந்நூல் விற்பனையில்தான் இது தங்கியிருப்பதாகவும் அறிகின்றேன்.

ஈழத்திலுள்ள சைவமக்கள் மட்டுமல்ல தமிழ்கூறும் நல்லுலகிலுள்ள சைவமக்களும் முன்வந்து, இந்த நல்லநூலை வாங்கி சைவமும் தமிழும் வளரவும் வாழவும் உதவ வேண்டும். இது அவர்களின் மேலான கடமை. நூல் வேண்டுவோர், ச. வைத்தீஸ்வரக்குருக்கள் அவர்கள், ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம், காரைநகர் என்ற முகவரிக்கு எழுதிப் பெறலாம். சைவர்களே சைவத்தை ஆதரித்து வளர்க்காவிடில் அது எப்படி வளரும்.

0 0 0

## சாந்தி அஞ்சலி

பத்துப்பேர்களாவது வருவார்களா என்று சந்தேகித்தேன். பேச்சாளர், பாடகர்கள் உட்பட 50 பேர் வந்திருந்தனர். எங்கே? சென்றவாரம் கொழும்பு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற மகாத்மாகாந்தி அமரரான புண்ணியதினக் கூட்டத்துக்குத்தான். இந்திய ஹைகமிஷன் பிரதிநிதியும் அங்கு வந்திருந்தார்.

மகாத்மாவை நம்மில் பலரும் அதற்குள் மறந்துவிட்டோம். பிரதமரின் காரியாலயத்துக்கு முன்னுள்ள பூங்காவில் அவருக்கு ஒரு சிலை எழுப்ப பெருந்தொகைப் பணம் வசூலிக்கப்பட்டு, அங்கு அஸ்திவாரக்கல்லும் நாட்டப்பட்டது. அந்தப் பணம் என்ன ஆயிற்றோ தெரியவில்லை! ஆனால் ஒன்று, அங்கு சிலை வைத்திருப்பின் மதுரைக்குப் பக்கத்திலே உசிலம்பட்டியில் காந்தி சிலைக்கு ஏற்பட்டதுபோல் இங்கும் நடந்திருக்கலாம். சிலை வைப்பது மகாத்மாவுக்கே பிடிக்காது. அதற்குப் பதில் அவர் கூறிய யோசனைப்படி காரியம் செய்வதே பலவிதங்களிலும் பயன்படுவதாகுமல்லவா?

உணவு, உடை விஷயத்தில் தன்னிறைவு பெறவும் கிராமியக் கைத்தொழில்களை வளர்க்கவும் மகாத்மா ஆக்க திட்டம் தயாரித்து நடத்தி வந்தார். அத்திட்டம் இந்தியாவில் இப்போது நல்ல பலன் அளித்து வருகின்றது. இலங்கையிலே அதுபோன்ற திட்டத்தை கட்சிபேதமின்றி அரசாங்கமுன்னிட்டு பல தலைவர்களும் கூடித் தயாரித்து நடத்தி வைக்க ஏன் முன் வரக் கூடாது? இந்தியாவின் உதவியை இவ்விஷயத்தில் நாடினால் லட்சக்கணக்கானவர்களுக்கு இங்கு வேலைவாய்ப்பு கிடைப்பதுடன் பசிபட்டினியும் பஞ்சமும் வெகுவாகத் தீரும்.

## ஜெயராஜன் எழுதுவது

இப்பஞ்ச காலத்திலும் கொழும்பிலே பல வீடுகளில் சர்வோதய பாத்திரம் (பிடி அரிசிக்கலயம்) வைத்து வீடு வீடாக அரிசி வசூலித்து பல ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு அளிக்க முடிகிறதாம். உருத்திரபுரம் சாந்திநிலையத்திலும் இரத்மலானை இந்துக்கல்லூரிச் சதுக்கத்திலுமுள்ள 212 பத்தாம் குறுக்குத்தெரு சர்வோதய நிகேதனிலும் கமம், நெசவு, அச்சு, தையல், மரவேலை முதலிய தொழில்களில் இலவசப் பயிற்சி அளிக்கின்றனராம். வேலையற்ற இளைஞர்களே ஏன் நீங்கள் முன்வந்து விண்ணப்பிக்கக் கூடாதா?

0 0 0

## இரு பெரியார்கள்

கொழும்பிலே சைவசமய வளர்ச்சிக்கான சில காரியங்கள் நடைபெற்று வருகின்றன. செட்டியார்தெரு கதிர் வேலாயுதசுவாமி கோவில் கும்பாபிஷேகம் மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வ விநாயகமூர்த்தி கோவில் பாலஸ்தாபனம் இவை நயினை பிரதிஷ்டாபூஷணம் கைலாசநாதக்குருக்கள் அவர்கள் தலைமையில் சிறப்பாக பக்திசிரத்தையுடன் நடைபெற்றது.

துன்பம் அதிகரிக்க அதிகரிக்க மக்களுக்கு தெய்வத்தில நம்பிக்கை அதிகரிக்குமென்பார்கள். கொழும்பிலே கோவில்களிலும் தெய்வீக காரியங்களிலும் சமீபகாலத்தில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து வருவது இதற்கு அத்தாட்சி.

இப்போது இலங்கைக்கு இரு இந்திய சுவாமிகள் விஜயம் செய்திருக்கிறார்கள். ஒருவர் புகழ்பெற்ற சுவாமி சாந்தானந்தா. கொழும்பிலே அவர் நடத்திய பிரார்த்தனைக் கூட்டங்களில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும், சாயி இல்லத்திலும் அவரது இன்னிசைப் பஜனைகளும், ருசிகரமான பேச்சும் ஏராளமானவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தன.

மற்றொருவர் சுவாமி ஹரிதாஸ். இவர் இடுப்பில் லங்கோடும், மூன்று முழச் சிறிய துண்டுமே அணிந்துள்ளார். பக்கவாத்தியங்களுடன் அவர் செய்யும் இன்னிசை உபந்நியாசங்கள் பக்தி உணர்ச்சியையும், தெய்வ நம்பிக்கையையும் மக்களிடையே பெருக்குகின்றன. அவரது பேச்சும் நவரசமும் கலந்தது. இரு கைகளிலும் சிப்பளாக்கட்டைகள் வைத்துக்கொண்டு அவர் செய்யும் நாம பஜனைகள், கேட்போரை மெய்மறக்கச் செய்கின்றன.

இவ்விரு சுவாமிகளும் இப்போது மலைநாட்டிலே சுற்றுப் பிரயாணம் செய்துவருகின்றனர். இவ்விருவரையும் இச்சமயம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து, அவர்களது இன்னிசையையும் நல்லுரைகளையும் கேட்பது அங்கு புண்பட்ட மக்கள் மனதுக்குப் பெரும் ஆறுதலாகவும் புதிய நம்பிக்கை அளிப்பதாகவும் இருக்கும். ——

## ஐ. தே. கட்சியின்

(1ம்பக்கத் தொடர்ச்சி)

கட்சி மௌனமாக இருந்தது. ஐக்கிய தேசியக்கட்சி அதன் மதக் கொள்கை என்ன என்பதைப் பகிரங்கமாகக் கூறட்டும். அரசியல் சாஸனத்தில் நாம் கையெழுத்திடவில்லை. ஐக்கியதேசியக் கட்சியைப் போலவோ அல்லது வேறெந்த சிங்களக்கட்சிகளைப் போலவோ நாம் தமிழர்களையும் முஸ்லிம்களையும் எதேச்சாதிகாரத்திற்கு அடிபணியச் செய்யவில்லை. தமிழர்கள், முஸ்லிம்கள் என்று மன்னாரில் பிரிக்கப்பார்க்கிறார்கள். இந்தச் சில்லறைவிளையாட்டு மன்னாரிலுள்ள தமிழர்களிடமும் முஸ்லிம்களிடமும் பலிக்கவே பலிக்காது. அரசியல் அடிப்படையிலேயே நாம் போட்டியிடுகிறோம். தமிழர்களை முதலில் நசுக்கிப் பின்னர் முஸ்லிம்களைப் பதம் பார்க்க இருக்கும் சதித்திட்டத்திற்குத் தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் அதுவும் முஸ்லிம் மக்கள் ஏமாந்துவிடக் கூடாது.

## முஸ்லிம்களுக்கு எதிர் அல்ல

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசியதாவது:

தமிழரசுக்கட்சி முஸ்லிம்களுக்கு எதிரானது என்று சிலர் பொய்ப் பிரசாரம் செய்துவருகின்றனர். கிழக்கு மாகாணத்திலே முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள தொகுதிகளில் ஆங்கெல்லாம் கணிசமான தமிழ் வாக்காளர்கள் இருந்தபோதிலும் முஸ்லிம்களையே தமிழ் அபேட்சகர்களுக்கெதிராக நிறுத்தினோம். ஜனாப்களான முஸ்தபாவையும் காரியப்பரையும் முகமது அலியையும் பாராளுமன்றத்திற்கு வெற்றிவாகையுடன் செல்லச்செய்தோம். ஜனாப் மன்சூர் மௌலானாவைச் செனட்டராக்கினோம். தமிழரசுக்கட்சி தமிழர்களதும் முஸ்லிம்களதும் கட்சி. அவர்களது நலனைக் கருதித் தமிழர் கூட்டணியில் இணைந்து தன்னை அர்ப்பணித்துள்ளது.

இக் கூட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, பருத்தித்துறை தேசியப்பேரவை உறுப்பினர் திரு. க. துரைரத்தினம், உடுவில் உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் திரு. சபா மாணிக்கமணி, ஜனாப் மூத்துராசா, ஜனாப் கபூர், திரு ஐ. திருஞானம், திரு. ம. பீட்டர் பொன்கலட் மற்றும் பலர் பேசினர்.

## மரண அறிவித்தல்

**வைத்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை**

கரம்பனைச் சேர்ந்த முன்னைநாள் பிரபல வியாபாரியான வைத்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் புஷ்பம் மேரி முத்தம்மாவின் அன்புக் கணவரும், திருமதி மேரி மரியதாஸின் தந்தையும், கொழும்பு வருமானவரிக் கந்தோரைச் சேர்ந்த எஸ். இ. மரியதாஸ் அவர்களின் மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக சொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு இன்று மாலை 4 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

எஸ். இ. மரியதாஸ், 43/1. நாவலர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 184

இலங்கையில் "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் வெலிங்டன் ... இலக்கத்தில் [illegible] 1974-ம் ஆண்டு பெப்ரவரி 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. The Eelanadu [illegible] ELANADU P. Box. No. 49, Jaffna. Telegrams: [illegible] புதினப்பத்திரிகையாக பதிவு [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org